முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2025 யூலை

## (204) வணிக முகாமைத்துவம்

(Business Management)

2025-07-27
பிற்பகல்
[01.45 – 05.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## <u>பகுதி A</u>

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பயனுறுதித்தன்மை (Effectiveness) என்பது :

(1) உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையிலான தொடர்பு

(2) சரியானதைச் செய்வது

(3) சரியாகச் செய்வது

(4) மற்றவர்கள் ஊடாக காரியங்களைச் செய்வது

**1.2** பின்வருவனவற்றில் எந்தத் தொகுதி பாரம்பரிய (மேற்கைத்தேய) முகாமைத்துவப் பாணியின் ஒரு பண்பாகும்?

(1) மனிதன் சார்ந்தது (2) வாடிக்கையாளரின் திருப்தி

(3) செயன்முறை சார்ந்தது (4) பெறுபேறுகள் சார்ந்தது.

**1.3** பின்வருவனவற்றில் அதிகாரக் கையளிப்பின் ஓர் அனுகூலமாக அமைவது எது?

(1) பயனுறுதிவாய்ந்த முகாமை (2) சிறந்த ஒருங்கிணைப்பு

(3) ஊழியர்களின் அபிவிருத்தி (4) மேற்கூறிய யாவும்

**1.4** பின்வருவனவற்றில் ஒரு வெற்றிகரமான பண்டக்குறிக்கான தேவைப்பாடு **அல்லாதது** எது?

(1) தொடர்புடைமை (2) தெளிவுபடுத்தல்

(3) சிக்கல்தன்மை (4) ஒத்திசைவு

**1.5** பின்வருவனவற்றில் போட்டரின் பெறுமதிச் சங்கிலியின் ஆதரவு நடவடிக்கை ஒன்றாக **அமையாதது** எது?

(1) தொழினுட்ப அபிவிருத்தி (2) சந்தைப்படுத்தலும் விற்பனையும்

(3) பெறுகை (4) மனித வள முகாமைத்துவம்

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*வினா இல. **1.6** தொடக்கம் **1.10** வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக் கப்பட்ட சொல் / சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.6** ............ *(பொறுப்புக்கூறல் / வலு)* என்பது மற்றையவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான ஒரு நபரின் ஆற்றல் ஆகும்.

**1.7** ............ *(சிறப்புத்தேர்ச்சி / நெகிழ்ச்சித்தன்மை)* என்பது அதிகாரவியலின் ஒரு பண்பாகும்.

**1.8** ............ *(ஆட்சேர்ப்பு / மனித வளத் திட்டமிடல்)* என்பது நிறுவனத்தில் நிலவும் வெற்றிடங் களுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளின் ஒரு தொகுப்பை உருவாக்கும் செயன்முறை ஆகும்.

**1.9** ............ *(விற்பனை / சந்தைப்படுத்தல்)* எண்ணக்கருவில், உற்பத்திப் பொருள்கள், பொருள்களின் தரத்தைப் பொருட்படுத்தாமல் ஆக்ரோஷமாக விற்கப்படுகின்றன.

**1.10** ............ *(உற்பத்தியாளர்கள் மீதான கவனக்குவிப்பு / ஒருங்கிணைந்த முறைமை)* என்பது மொத்த தர முகாமைத்துவத்தின் (TQM) ஒரு கோட்பாடாகும். (01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உங்களுடைய விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதவும்.*

**1.11** சந்தைத் துண்டமாக்கலின் இரண்டு (02) நன்மைகளைப் பட்டியலிடுக.

**1.12** "சந்தை ஊடுருவல்" மற்றும் "சந்தை அபிவிருத்தி" ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.13** மாற்றத்தின் இரண்டு (02) வகைகளைக் குறிப்பிடுக.

**1.14** போட்டரின் மரபியல்பான தந்திரோபாயங்களில் உள்ள ஒரு தந்திரோபாயமான கிரயத் தலைமைத்துவத்தைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.15** உள்ளக ஆட்சேர்ப்புக் கொள்கையில் உள்ள இரண்டு (02) அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

**Zenith Tech Solutions** என்பது விரைவாக வளர்ந்துவரும் ஒரு மென்பொருள் நிறுவனம் ஆகும். இது தனது விரிவாக்கல் தந்திரோபாயம் பற்றிய முக்கிய தீர்மானமொன்றை எடுப்பதில் கவனம் செலுத்துகிறது. கம்பனியின் முகாமைத்துவ அணியானது நிறுவன இலக்குகளை அடையும் நோக்குடன் முகாமையாளர்களது திறன்களின் அடிப்படையில் பல்வேறு மட்டங்களாகப் பிரிப்பதற்குத் திட்டமிடுகிறது.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) படிநிலை (hierarchy) அடிப்படையில் முகாமையாளர்களை வகைப்படுத்தும்போது **Zenith Tech Solutions** இனால் கவனத்திற் கொள்ளப்படும் திறன்களின் இரண்டு (02) வகைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) ஹென்றி மின்ஸ்பேக்கின் கூற்றுப்படி, ஒரு முகாமையாளருக்குத் தேவையான இரண்டு (02) தீர்மானமெடுத்தல் வகிபாகங்களைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(c) பகுத்தறிவான தீர்மானங்களை எடுக்கும்போது, **Zenith Tech Solutions** எதிர்கொள்ள வேண்டிய நான்கு (04) தடைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**Tech Innovators Ltd.** ஆனது AI-ஆற்றல்மிக்க தீர்வுகளில் ஈடுபட்டுள்ளது. **எம்மா** என்பவர் **Tech Innovators Ltd.** இன் CEO ஆவார். கம்பனியானது அதன் சந்தை அடைவை விரிவுபடுத்த ஒரு திடமான திட்டம் தேவை என்பதை அவர் உணர்ந்துள்ளார்.இடர்களைத் தவிர்க்க திட்டமிடல் செயன்முறையை அவர் பின்பற்றுகிறார். மேலும், நிறுவன இலக்குகளை அடையும்போது ஊக்கப்படுத்தலில் முகாமையாளர்களின் வகிபாகம் முக்கியமானது என்று நம்புகிறார்.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) திட்டமிடல் செயன்முறையின் படிமுறைகளைக் (steps) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) வணிக நிறுவனம் ஒன்றின் இரண்டு (02) வகையான திட்டங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) ஒரு நிறுவனத்தின் ஊழியர்களை ஊக்குவிப்பதில் முகாமையாளரின் இரண்டு (02) வகிபாகங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**PQR Techno Ltd.** இன் மனித வளப் பிரிவானது ஊழியர்களின் நலன்புரி முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தத் திட்டமிடுகிறது. மேலும், செயல்பாடுகள் முகாமையாளர் உற்பத்திச் செயன்முறையில் உள்ள உற்பத்தி அட்டவணைகளையும் வள முகாமைத்துவத்தையும் மேற்பார்வை செய்து, வினைத்திறனான வகையில் நாளாந்தச் செயன்முறைகளை உறுதி செய்கிறார். தொழிற்பாட்டு முகாமையாளர்கள் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதிலும் ஒழுங்கைப் பராமரிப்பதிலும் கவனம் செலுத்தும்போது, கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர், புத்தாக்கம் மற்றும் நீண்டகால தொலைநோக்குப் பார்வையை வளர்ப்பதன் மூலம் முழு முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவமல்லாத ஊழியர்களையும் ஒரு தலைவராக உத்வேகப்படுத்தி, ஊக்குவிக்கின்றார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **PQR Techno Ltd.,** ஒரு சிறந்த ஊழியர் நலன்புரி முகாமைத்துவ முறைமையைக் கொண்டிருப்பதன் மூன்று (03) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) **PQR Techno Ltd.** அதிக நன்மைகளைக் பெற பின்வரும் செயற்பாட்டு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை **விபரிக்குக.:**

(i) வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்

(ii) தர முகாமைத்துவம் (05 புள்ளிகள்)

(c) "ஒரு தலைவர்" மற்றும் "ஒரு முகாமையாளர்" இடையேயுள்ள இரண்டு வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

ஒரு விளம்பர நிறுவனமான **Global Solutions** கொழும்பில் இயங்குகிறது. **Global Solutions** இன் குழுக் கூட்டமொன்றில், ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதன் மூலம் ஊழியர்களை ஊக்குவிக்க ஆபிரஹாம் மாஸ்லோவின் தேவைப் படிநிலைக் கோட்பாட்டைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை CEO விளக்கியிருந்தார். மேலும், **Global Solutions** இன் வெற்றிக்கு பயனுறுதிமிக்க தொடர்பாடலின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். **Global Solutions** இல் பயன்படுத்தப்படும் பயனுறுதிவாய்ந்த கட்டுப்படுத்தல் அதன் வணிகத்தின் தற்போதைய இலக்குகளை அடைய ஒரு பிரதான காரணியாக இருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Global Solutions** இல் ஊழியர்களை ஊக்குவிக்கப் பயன்படுத்தப்படும் தேவைப் படிநிலைக் கோட்பாட்டில் உள்ள இரண்டு (02) வகையான தேவைகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **Global Solutions** இற்கு கட்டுப்படுத்தல் ஏன் முக்கியம் என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(c) **Global Solutions** இற்கான பயனுறுதிமிக்க தொடர்பாடலின் இரண்டு (02) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**MMC Ltd.** உற்பத்திச் செயன்முறை மற்றும் அதன் வடிவமைப்பில் AI-ஆற்றல்மிக்க தானியங்கி முறையைப் பயன்படுத்தத் திட்டமிடுகிறது. மாற்றங்களின் ஊடாக ஊழியர்களை வழிப்படுத்துவதில் உருமாற்றத் தலைமைத்துவம் (transformation leadership) முக்கிய வகிபாகத்தை வகிக்கிறது. புதிய வேலைச் சூழலுக்கு ஊழியர்கள் மாறுவதை எளிதாக்க தெளிவான தொடர்பாடல், ஊக்குவிப்பு, மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்தி, முகாமையானது ஓர் உருமாற்றத் தலைமைத்துவ அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. எவ்வாறாயினும், சில ஊழியர்கள் மாற்றத்தை எதிர்க்கின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **MMC Ltd.** இன் செயற்பாடுகளில் புதிய தொழினுட்பத்தின் இரண்டு (02) தாக்கங்களை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) மாற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஊழியர்களை ஊக்குவிக்கும் நான்கு (04) வழிமுறைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) **MMC Ltd.** இல் உருமாற்றத் தலைமைத்துவக் கோட்பாட்டின் பொருத்தப்பாட்டுத் தன்மையை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

**XYZ (Pvt) Ltd.** என்பது இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக வேகமாக – விற்பனையாகும் நுகர்வுப் பொருள்கள் (FMCG) துறையில் இயங்கிவரும் ஓர் இலங்கை நிறுவனமாகும். சில உற்பத்திப்பொருள் வகைகளில் சந்தைத் தலைவராக இருந்தாலும், பொருளாதார ஸ்திரமின்மை, மாறிவரும் நுகர்வோரின் விருப்பங்கள், மற்றும் விரைவான தொழினுட்ப முன்னேற்றங்கள் காரணமாக கம்பனி தற்போது பல சவால்களை எதிர்கொள்கிறது.

சமீபத்திய பொருளாதார நெருக்கடி வாடிக்கையாளர்களின் வாங்கும் ஆற்றலைக் கணிசமாகப் பாதித்துள்ளது. பணவீக்கம் மற்றும் மாற்றுவீத ஏற்ற இறக்கங்கள் மூலப் பொருள்களின் கிரயத்தை அதிகரித்துள்ளன, இது, **XYZ (Pvt) Ltd.** பொருள்களின் விலையை உயர்த்தவோ அல்லது இலாப வரம்பைக் குறைக்கவோ கட்டாயப்படுத்தியுள்ளது. இலங்கை அரசாங்கம் புதிய வரிக் கொள்கைகள் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. இது கம்பனியின் வழங்கல் சங்கிலியைப் பாதித்துள்ளது.

மேலும், நுகர்வோரின் நடத்தை டிஜிடல் தளங்களை நோக்கி நகர்ந்துள்ளன. இலத்திரனியல் வர்த்தகம் மற்றும் சமூக ஊடக சந்தைப்படுத்தலின் எழுச்சியுடன் போட்டித்தன்மையுடன் இருப்பதற்கு **XYZ (Pvt) Ltd.** அதன் சந்தைப்படுத்தல் உத்திகளை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி அதன் செயற்பாடுகளுள் டிஜிடல் மாற்றத்தை ஒருங்கிணைப்பதில் மெதுவாக உள்ளது.

மனித வளக் கண்ணோட்டத்தில், திறமையைத் தக்கவைத்தல், ஊழியர்களின் ஊக்குவிப்பு, தொலைதூர வேலைகளுக்கு (remote work) ஏற்ப மாறுவதில் கம்பனி சவால்களை எதிர்கொள்கிறது. பல திறமையான ஊழியர்கள் வெளிநாடுகளில் சிறந்த வாய்ப்புகளைத் தேடுகின்றனர். இது திறமை வற்றிப் போவதற்கு (talent drain) வழிவகுக்கிறது. தேக்கமடையும் ஊதியங்கள் மற்றும் தொழில் முன்னேற்றமின்மை ஆகியன காரணமாக ஊழியர்களின் அதிருப்தி அதிகரித்து வருகிறது.

இந்தச் சவால்களுக்கு பதிலளிக்கும் விதமாக, **XYZ (Pvt) Ltd.** டிஜிடல் சந்தைப்படுத்தல் ஒருங்கிணைப்பு, உற்பத்திப் பொருள் வரிசைகளை பல்வகைப்படுத்தல் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக அதன் வேலைப்படையை மறுசீரமைத்தல் உள்ளிட்ட ஒரு தந்திரோபாய மாற்றத்தைப் பரிசீலித்து வருகிறது. முகாமையானது மிகவும் தகவமைப்பானதும் (adaptable) புத்தாக்கம் மிக்கதுமான நிறுவன கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்கு மாற்ற முகாமைத்துவத் தந்திரோபாயங்களிலும் (change management strategies) கவனஞ் செலுத்துகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **XYZ (Pvt) Ltd.** தனது விற்பனையை அதிகரிக்கப் பயன்படுத்தக்கூடிய டிஜிடல் சந்தைப்படுத்தலின் மூன்று (03) முறைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **XYZ (Pvt) Ltd.** இற்கு நெறிமுறை (ethical) சார்ந்த சந்தைப்படுத்தல் ஏன் முக்கியம் என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) நிறுவனத்தின் ஊழியர்களைத் தக்கவைக்க **XYZ (Pvt) Ltd.** பயன்படுத்தக்கூடிய நான்கு (04) வழிவகைகளைக் (ways) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) மனித வள முகாமைத்துவத்தின் நான்கு (04) நோக்கங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(e) **XYZ (Pvt) Ltd.** இன் தந்திரோபாயங்களில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று (03) உள்ளகக் காரணிகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |